அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 28/95

எனது இல. 1/543 ஈ 2 டி/12/95/1
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 7
1995.09.29

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்,
அரசாங்க அதிபர்கள், திணைக்களத் தலைவர்கள்,
ஆளுநர்களின் செயலாளர்கள்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின்
செயலாளர்கள்,
அரசாங்க கூட்டுத்தாபனங்களின் அரசுக்குச்
சொந்தமான வர்த்தக நிறுவனங்களின் தலைவர்கள்/
உரிய அதிகாரிகள் யாவருக்கும்.

**அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் 15/90
மற்றும் 17/92 இன் படி சலுகை புள்ளிகளின் பேரில்
ஆட்சேர்ப்புச் செய்தல்.**

---

திறந்த போட்டிப் பரீட்சைகளினால் அரச சேவைக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்காக வெளியிடப்பட்ட 1990.03.09 ஆந் தேதிய 15/90 இலக்கமிடப்பட்டதும் 1992.03.24 ஆந் தேதிய 17/92 இலக்கமிடப்பட்டதுமான அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட சலுகை புள்ளி கோருவோர்கள் ஆட்சேர்ப்புச் செய்யும் முறை மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. பயங்கரவாதச் செயல்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உயிரழிவுகள், சொத்தழிவுகள் என்பவற்றிற்காக அளிக்கப்படும் சலுகைகள் இனிமேற் கொண்டு புனர்வாழ்வு அமைச்சின் மூலம் கொடுப்பனவு செய்யப்படும். நஉஷ்ட ஈடுகளுக்கும் ஏனைய சலுகைகளுக்கும் வரையறுக்கப்படுவதுடன் இனி வருங்காலங்களில் அத்தகைய குடும்பங்களுக்காக 17/92 இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மூலம் சலுகை புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

3. இனி வருங்காலங்களில் இன விகிதாசாரத்தை கவனத்திற் கொண்டு பார்ப்பது, திறந்த போட்டிப் பரீட்சைகளின் மூலம் அரச சேவையின் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு-கள் செய்யப்படுமிடத்து மட்டுமே ஆகும்.

4. 1995.06.23 ஆந் திகதி தொடக்கம் இந்த ஏற்பாடுகள் செயற்படும்.

5. 1992.03.24 ஆந் தேதிய 17/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இத்தால் ரத்துச் செய்யப்படுகிறது.

ஒப்பம்: வை. பி. புஸ்ஸைதெனிய.
பதில் செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.